# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,887 — 1970 ජනවාරි 2 වැනි සිකුරාදා — 1970.1.2

14,887 ஆம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 1 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 1 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்களை .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கரவாகு மேற்குக் கிராம சபை

#### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

*தண்ணீர் வரி சம்பந்தமான கட்டளைகள்*

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழும் உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியதாய எல்லைகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமைவாகவும் சபையினால் நடாத்தப்படும் நீர்வழங்கல் திட்டத்தினால் பயனடையும் கிராமச் சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள பிரதேசங்களிலுள்ள கட்டிடங்கள், காணிகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு சத (6) வீதமானதும் ஒவ்வொரு வருடத்திலும் மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதான ஒரு வருடாந்த விசேட தண்ணீர் வரியைக் கரவாகு மேற்குக் கிராமச் சபை விதித்திருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 2.11.1969.

1–214—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## துணை விதிகள்

L. D—B 33/69

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள மீகஹகியுலக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 21.12.1969.

#### துணைவிதி

இச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தண்ணீர்ச் சேவை சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் 28 ம் பகுதியில் மீகஹகியுலக் கிராமச் சபைக்கு ஏற்புடைய அளவுக்கு 27(2) ஆம் துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :

"(3) சபையினால் நிறுவப்பட்டிருக்கும் தண்ணீர்ச் சேவையிலிருந்து தனியாருக்கான ஒரு இணைப்பு வழங்கப்பட்டுள்ள எம்மனையத்தினதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதும், தண்ணீர்ச் சேவையிலிருந்து தண்ணீர் பெறும் ஒவ்வொரு மாதத்துக்கும் அம்மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள முதலாவது ½ அங்குல வடிகுழாய்க்கு, எந்த வியாபார நோக்கத்துக்காகவும் தண்ணீர் உபயோகிக்கப்படுமிடத்து இரண்டு ரூபா ஐம்பது சதம் கொண்டதொரு கட்டணத்தையும் எந்த வீட்டுத் தேவைக்காகவும் தண்ணீர் உபயோகிக்கப்படுமிடத்து ஒரு ரூபாவைக் கொண்டதொரு கட்டணத்தையும் மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ள ஒவ்வொரு குழாய்க்கும் ஐம்பது சதம் கொண்டதொரு கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும்."

1–205—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 14 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## கெக்கிருவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் கெக்கிருவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 21 ந வ.

### துணைவிதிகள்

1. இத்துணைவிதிகள் 1969 ம் ஆண்டின் கெக்கிருவைப் பட்டின சபை விளம்பரத் துணைவிதிகள் என எடுத்தாளப்படலாம்.

2. தலைவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒரு அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் பேரிலன்றி வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதிலுமிருந்து பார்க்கக்கூடிய வண்ணம் விளம்பரம் எதனையும் எவரும் பார்வைக்கு வைத்தல் அல்லது வைக்கச் செய்தல் ஆகாது. ஆயினும் இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகள், பின் வரும் விளம்பரங்கள் எதற்கும் அத்தகைய விளம்பரம் ஒளியலங்கார விளம்பரமாக அல்லது வான் அடையாளமாக இருந்தாலன்றி, பொருந்தா—

(அ) தேறும் வருமானங்களை ஒரு தரும கைங்கரியத்தின் பொருட்டு உபயோகிப்பதற்கான ஒரு களியாட்டம்பற்றிய விளம்பரம் ;

(ஆ) களியாட்டம் நடைபெறவிருக்கும் இடத்திலேயே பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் எக்களியாட்டத்தையும் பற்றிய ஒரு விளம்பரம் ;

(இ) அரசாங்கத்தால் பார்வைக்கு வைக்கப்பட்ட ஒரு விளம்பரம் ;

(ஈ) சமய, அரசியல் அல்லது பொதுக்கூட்டம் சம்பந்தமான ஒரு விளம்பரம் ;

(உ) எக்கட்டடத்தினதும் சாரளத்திலிருக்கும் ஒரு விளம்பரம் ;

(ஊ) " வாடகைக்கு " எனும் ஒரு விளம்பரம் ;

(எ) " விற்பனைக்கு " எனும் ஒரு விளம்பரம் ;

(ஏ) வீட்டுக்குரிய ஒரு பெயர்த்தகடு ;

(ஐ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய ஒரு பெயர்த்தகடுவாரி ;

(ஒ) வியாபார நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு வாகனத்தில் அவ்வாகனச் சொந்தக்காரரின் பெயரையும் முகவரியையும் காட்டும் ஒரு விளம்பரம் ;

(ஓ) அங்கு நடத்தப்படும் ஒரு தொழிலை அல்லது வியாபாரத்தைப் பற்றிய அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு விளம்பரம்.

3. (1) எந்த விளம்பரத்தையும் பார்வைக்கு வைத்தற்கு அனுமதி கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும், அவ்விளம்பரத்தைப் பார்வைக்கு வைக்கத் தொடங்குதற்குக் கருதியுள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

எனினும், விசேட சூழ்நிலைகளில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் அனுப்பப்படாத விண்ணப்பங்களையும் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் விண்ணப்பதாரர் பார்வைக்கு வைக்கக் கருதியுள்ள விளம்பரத்தின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(3) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பத்தைத் தலைவர் அங்கீகரிக்குங்கால் அவ்விளம்பரத்தைப் பார்வைக்கு வைத்தற்கான அனுமதிப் பத்திரத்துக்காக இதனுடன் இருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் விகிதங்களின்படி கணக்கிடப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்தும்படி அவர் பணித்தல் வேண்டும். அத்தகைய கட்டணத்தைச் செலுத்தும்வரை அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

4. (1) ஒரு விளம்பரத்தைப் பார்வைக்கு வைத்தற்கு எவருக்காயினும் ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமிடத்துத் தலைவர் அத்தகையவரை—

(அ) அவ்வனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையும் அவ் விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியிலும் சேர்க்கும்படி ; அல்லது

(ஆ) அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டதற்கு அடையாளமாக முத்திரையிடுதற் பொருட்டு அவ்விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியையும் தலைவர் முன் கொண்டுவரும்படி பணித்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் (1) ம் பந்தியின் கீழ் தலைவரால் பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அதற்குப் பணிந்து நடக்க வேண்டும்.

5. எவராவது—

(1) ஒரு விளம்பரத்தை, அவ்விளம்பரம் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டப்பட்ட அல்லது எழுப்பப்பட்ட ஒரு முன்னீண்ட அடையாளமாக இருந்தாலன்றி, கட்டடக் கோட்டிலிருந்து தளப்பாங்காக அளக்கையில் வீதி அல்லது தெரு எதனுள்ளும் ஆறு அங்குலத்துக்கு அதிகமான தூரத்துக்கு நீண்டிருக்கும் படி ஒரு விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பிக்கவோ ;

(2) வீதி அல்லது தெரு எதனிலும் நீண்டிருக்கும் கட்டட முகப்பு ஒன்றில் அத்தகைய முகப்பின் எல்லைக்கப்பால் நீண்டிருக்கும் அல்லது உயரத்தில் எந்த இடத்திலாவது அதனடிக்கும் நடைபாதைக்கும் அல்லது நிலத்தின் அடிமட்டத்துக்கும் இடையிலுள்ள தூரத்தின் நான்கிலொரு பங்கிற்கு அதிகமாக இருக்கத்தக்கதாகக் கடைச்சின்னம் எதனையும் பொருத்தி வைக்கவோ அல்லது தொங்கவிடச் செய்யவோ அல்லது ;

(3) தலைவரால் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதனையும் கட்டுவிக்கவோ அல்லது எழுப்புவிக்கவோ கூடாது.

6. பொது வணக்க ஸ்தலம், பொது நந்தவனம் அல்லது மலசலக்கூடம் அல்லது ஏதாவது பாலம், வீதி, விளக்குத்தூண், தந்தி அல்லது தொலைபேசித் தூண் எதன்மீதும் எவ்விளம்பரத்தையும் எவரும் பார்வைக்கு வைப்பிக்கக்கூடாது ;

7. விளம்பரம் எதையும் வெளிப்படுத்தும்பொருட்டு வீதி அல்லது தெரு எதிலும் எவரும் வானொலிப்பெட்டி கிராமபோன் சங்கீதக் கருவி மணி அல்லது வேறு கருவி எதனையும் உபயோகிக்கக்கூடாது.

8. (1) விளம்பரம் எதுவும், தலைவரின் அபிப்பிராயப்படி விகாரமான அல்லது ஆட்சேபிக்கத் தக்க நிலையில் இருக்குமிடத்து, எழுத்து மூலமான அறிவித்தல் வாயிலாக, அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் காலத்துக்கு அந்த விளம்பரத்தைப் பிரசித்தஞ் செய்வதை நிறுத்தும்படி அதனைப் பிரசித்தஞ் செய்பவருக்கு அவர் கட்டளையிடலாம்.

(2) (1) ம் பந்தியின் கீழ் தலைவரிடமிருந்து ஒரு அறிவித்தலைப் பெறுபவர் அதில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவ்வறிவித்தலுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

9. விளம்பரங்களைப் பார்வைக்கு வைப்பதற்கான விளம்பரப் பலகை எதனதும் உடைமையாளர் அல்லது குத்தகைக்காரர்—

(1) அந்த விளம்பரப் பலகையைச் செம்மையாகவும் பாதுகாப்பாகவும் வைத்துப் பேணவும் ;

(2) அந்த விளம்பரப் பலகையின் முன்புறத்தில் துலக்கமான ஒரு இடத்தில் அவரது பெயரையும் முகவரியையும் தெளிவாகவும் எளிதில் வாசிக்கக்கூடியதுமான எழுத்துக்களில் எழுதிவைக்கவும் வேண்டும்.

10. எந்த விளம்பரத்திலும், அந்த விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தியமைக்கு அடையாளமாகத் தலைவரால் இடப்பட்டுள்ள அடையாளம், குறி எழுத்து, சொல் அல்லது எண் எதனையும் எவரும் உருவழிக்கவோ அல்லது உருவழிப்பிக்கவோ கூடாது.

11. எவரும்—

(அ) தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் அல்லது உருவில் அன்றி விளம்பரம் எதனையும் வாகனம் எதிலும் பார்வைக்கு வைத்தல் கூடாது.

(ஆ) பொலிஸ் கண்காணிப்பதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒளியலங்காரம் தவிர்ந்த எந்த ஒளியலங்கார விளம்பரத்தையும் தாங்கிச் செல்லும் வாகனமெதையும் எவ்வீதியிலும் அல்லது தெருவிலும் செலுத்துவிக்கக்கூடாது.

12. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனையும் மீறி நடக்கும் எவரும் ஒரு குற்றத்தைச் செய்தவராகிக் குற்றவாளியாகக் காணப்பட்ட தன் மேல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதம் ஒன்றுக்கும் தொடர்ந்து மீறி நடப்பாராயின் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் தொடர்ந்தும் அம்மீறிய செயலைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தியைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிக அபராதம் ஒன்றுக்கும் பாத்திரராவார்.

13. இத்துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையில் வேண்டினாலன்றி—

" விளம்பரம் " என்பது காணி, கட்டடம், அல்லது அமைப்பு எதற்கும் மேல் அல்லது எதனிலும் ஒட்டியிருக்கும் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ விளம்பர நோக்கமாக அல்லது விளம்பரப்பாங்கானவுள்ள சொல், எழுத்து, எண், அடையாளம், சுவரொட்டி, பலகை, அறிவித்தல், சின்னம் பிரதிமை அல்லது ஒப்பாக்கம் எதனையும் உட்படுத்தும் ;

" தலைவர் " எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

" சபை " எனில் கெக்கிருவைப் பட்டின சபை எனப் பொருள்படும்.

" விளம்பரப் பலகை " எனில் விளம்பரம் எதனையும் பார்வைக்கு வைத்தற்காக எழுப்பப்படும் அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு ஆதாரம், கம்பம், பலகை சுவர், பெட்டி அல்லது வேறு உபாயம் எதுவும் எனப் பொருள்படும் : மேலும்,

" வான்குறி " என்பது வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதனிலுமுள்ள ஏதாவது ஒரு இடத்திலிருந்து வானத்தைப் பின்னணியாகக் கொண்டு முற்றாகவோ அல்லது பகுதியாகவோ பார்க்கக்கூடியதாகவுள்ள காணி, கட்டடம், அல்லது வேறு அமைப்பு எதிலும் அல்லது எதற்குமேலாகவும் உள்ள தூண், தடி, கம்பம் அல்லது சட்டம் எதனிலும் பொருத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட விளம்பர நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் சொல், எழுத்து, மாதிரி, குறி, சின்னம் அல்லது ஒப்பாக்கம் எதனையும் குறிப்பதோடு, காணி, கட்டடம், அமைப்பு அல்லது வீதி எதிலும் அல்லது எதற்குமேலேயும் விளம்பர நோக்கமாக முற்றாகவேனும் அல்லது பகுதியாகவேனும் உபயோகிக்கப்படும் வாயுக் குண்டு, பாராக்குடை, இழுவண்டி அல்லது அதனை ஒத்த உபாயம் எதனையும் உட்படுத்தும்.

**அட்டவணை**

அனுமதிப்பத்திரத்துக்கான கட்டண விகிதம்—அனுமதிப்பத்திரம், தேவையான காலம்—

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | இரண்டு கிழமைகளுக்கு மேற்படாதவிடத்து ஒரு சதுர அடிக்கு | 50 |
| (ஆ) | இரண்டு கிழமைகளுக்கு மேல் ஆனால் ஒரு மாதத்துக்கு மேற்படாதவிடத்து ஒரு சதுர அடிக்கு .. | 1 0 |
| (இ) | ஒரு மாதத்துக்கு மேல் ஆனால் ஒரு வருடத்துக்கு மேற்படாதவிடத்து ஒரு சதுர அடிக்கு .. .. | 2 0 |
| (ஈ) | ஒரு வருடத்துக்கு மேற்படுமிடத்து ஒவ்வொரு வருடத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ஒரு சதுர அடிக்கு | 2 0 |

1–203—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

எல்.டீ.–பீ. 18/63

## கலேவலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 (9) ஆகிய பிரிவுகளின் கீழ கலேவெலைப் பட்டின சபையினுல் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினுல் அன்னருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 21.12.1969.

**துணைவிதிகள்**

1. (1) எம்மனையகத்தினதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒருவர், தமது மனையகத்துக்குச் சபை மலகூட சேவை வழங்கவேண்டுமென எப்போதாவது விரும்பினுல், அதற்காக அவர் தலைவருக்கு எழுத்திலான ஒரு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

(2) தலைவர், அவசியமாயின் உரிய முறையில் விசாரணை செய்த பின்னர் இத்துணைவிதியின் (1) ம் பந்தியின்படி செய்யப்பட்ட விண்ணப்பமெதனையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுத்துவிடலாம்.

2. சபையினுல் ஏற்படுத்தப்பட்டுள்ள மலகூட சேவையினுல் பயனடையும் மனையகமெதனதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், ஒவ்வொரு மாதத்திற்கும் சுத்தஞ் செய்யப்படும் ஒவ்வொரு வாளிக்கும் இரண்டு ரூபாய் என்ற விகிதப்படி கணக்கிடப்பட்ட ஒரு மலகூடக் கட்டணத்தைச் சபைக்குச் செலுத்தல் வேண்டும்.

3. 2 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணம், அதனைச் செலுத்துவதற்குரியதையடுத்து வரும் மாதத்தின் பத்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ சபையின் அலுவலகத்தில்அல்லது அத்தகைய கட்டணத்தை அறவிடுதற்கு தலைவரால் முறைப்படி எழுத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட எவரிடமாவது செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும், எம்மனையகத்தினதும் சொந்தக்காரரோ அல்லது குடியிருப்பாளரோ குறிப்பிட்ட ஏதாவது ஒரு மாதம் முழுவதும் அம்மனையகம் மூடப்பட்டிருக்கும் எனத் தலைவருக்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுத்து, அதன் பின்னர் நியமாகவே அம்மனையகத்தில் யாரும் தங்கியிருக்கவில்லையெனத் தலைவரை திருப்திப்படச் செய்தால், அம்மனையகத்துக்காக அம்மாதத்துக்கு மலகூடக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியதில்லை.

4. 2 வது துணைவிதியை மீறும் செயல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு அபராதத்தினுல் தண்டிக்கப்படக் கூடியதாகவிருக்கும்.

5. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " எனில் சபையின் தலைவர் எனப்பொருள்படும்.

" சபை " எனில் கலேவெலைப் பட்டின சபை எனப் பொருள்படும்.

6. 1965 செத்தெம்பர் 24 ந் தேதிய 14,513 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதி இத்தால் நீக்கப்படுகிறது.

1–186—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள கரந்தேனியக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினுல் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 21.12.1969.

**துணைவிதிகள்**

1. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :—

மோட்டார் வாகனச்சாலையொன்று வைத்திருத்தல்
பைசிக்கிள் திருத்தும் இடமொன்று வைத்திருத்தல்
கொல்லுலையொன்று வைத்திருத்தல்
அச்சகமொன்றுவைத்து நடாத்துதல்
தச்சுத்தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்
மின்தறியால் புடவை உற்பத்தி செய்தல்
தகர வேலைக் கடையொன்று வைத்திருத்தல்.

2. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :

வானொலிப் பெட்டிகள் திருத்தும் கடையொன்று வைத்திருத்தல்
டயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் இடமொன்று வைத்திருத்தல்
விறகுகாலையொன்று வைத்திருத்தல்
புகையிலை சேகரித்து வைத்திருத்தல்
வெற்றுச்சாக்குகள் சேகரித்து வைத்திருத்தல்
உலோகங்கள் சேகரித்து வைத்திருத்தல்
சிமெந்து சேகரித்து வைத்திருத்தல்
எந்திரத்தினுல் அல்லது மின்சாரத்தினுல் இயக்கும் நூல் நூற்கும், நெசவு செய்யும் ஆலையொன்று வைத்திருத்தல்.

1–184—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

A/VC/D/14/1

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (257 ம் அத்தியாயமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் மன்னார் மாவட்டத்து முசலி வடக்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டதும், அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினுல் அன்னருக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 21 ந் உ.

### துணைவிதி

நானாட்டான் கிழக்கு, முசலிவடக்கு, முசலி தெற்கு ஆகிய கிராமச் சபைகளால் ஆக்கப்பட்டு 1951 மார்ச் 16 ன் 10,225 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு முசலி வடக்குக் கிராமப் பிரதேசத்தில் நடைமுறையி லுள்ள தீங்கானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் தொடர் பான துணைவிதிகள் அவற்றின் (1) ம் துணைவிதியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றன :—

(1) அவற்றின் (1) ம் பந்தியின் (ஓ) ஆகிய விடயத்தை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் :—

(ஔ) காரீயம் பதப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல்,
(க) குழிவெட்டி முருகைக்கற்களெடுத்தல், தோண்டுதல்,
(ங) தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்த தல்,
(ச) பருத்திப் பஞ்சு அல்லது வைக்கோல் சேகரித்து வைத்தி ருத்தல்,
(ஞ) அச்சுக்கூடம் ஒன்று வைத்தல்,
(ட) ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்,
(ண) ஒக்ஸி வெல்டிங் செய்தல்,
(த) ஒக்ஸிஜன் உபயோகிக்கப்படும் கொல்லுலை ஒன்று வைத்தல்,
(ந) கொப்பறா சேகரித்து வைத்திருத்தல்,
(ப) கொல்லுலை ஒன்று வைத்தல்,
(ம) குளிர்பானங்கள் தயாரித்தல்,
(ய) தீப்பெட்டிகள் உற்பத்தி செய்தல்,
(ர) அரிசி ஆலை அல்லது மா அரைக்கும் ஆலை வைத்திருத்தல்,
(ல) சைக்கிள் திருத்தும் இடம் ஒன்று வைத்தல்,
(வ) மண்ணெண்ணெய்க் குதம் வைத்திருத்தல்,
(ழ) தேங்காய்மட்டை ஊறப்போடும் இடம் ஒன்று வைத்தல்.

(2) அவற்றின் (2) ம் பந்தியின் (எ) ஆகிய விடயத்தை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் :—

(ஐ) மொத்த விற்பனையின்பொருட்டு பதனழியக்கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்த பண்டங்களையும் சேகரித்து வைத்திருத்தல்,
(ஒ) விஞ்கிரி உற்பத்தி செய்தல்,
(ஓ) புகையிலை பக்குவம் பண்ணல் அல்லது உலர்த்தல்,
(ஔ) தோல் பதனிடும் சாலை ஒன்று வைத்தல்,
(க) பாக்குகள் பக்குவம் செய்தல்,
(ங) இரத்தம் அல்லது கழிவிறைச்சி அவித்தல்,
(ச) இரப்பர் சீட்டுக்கள் அல்லது கிரேப் இரப்பர் உற்பத்தி செய் தல்,
(ஞ) மூன்று மூடைகளுக்கு அதிகமான செயற்கை உரத்தை அல்லது செயற்கை உரம் செய்தற்கு உபயோகமாகும் பொருட்களை சேகரித்து வைத்திருத்தல்,
(ட) சோடா உற்பத்தி செய்தல்,
(ண) மீனுக்குப் பனிக்கட்டியிடல்,
(த) சுருட்டுக்கள் உற்பத்தி செய்தல்,
(ந) பீடிகள் உற்பத்தி செய்தல்,
(ப) பாணி அல்லது வெல்லம் உற்பத்தி செய்தல்,
(ம) ஒரு விறகுக் கடையோ அல்லது வெட்டுமரக்கடையோ வைத்தல்,
(ய) புகையிலை சேகரித்து வைத்திருத்தல்,
(ர) கள் சேகரிக்கும் நிலையம் ஒன்று வைத்தல்.

(3) அவற்றின் (3) ம் பந்தியின் (இ) ஆகிய விடயத்தை உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் :—

(ஈ) பற்றிகளுக்கு மின்னூட்டல்,
(உ) சுண்ணாம்பு சுடுதல், சேகரித்து வைத்திருத்தல், பக்குவம் பண்ணல் அல்லது அகர்த்தல்.

1–180—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

எல். டி—பி. 73/47

## பொல்காவலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பொல்காவலைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத் துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக் கப்பட்ட துணைவிதி.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 21 ந் வெ.

### துணைவிதி

பொல்காவலைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு 1949 ஏப்பிறல் 22 ந் திகதிய 9,969 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவையான துணைவிதிகள், 1 ஆவது துணைவிதியில் " அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழி " லின் வரை யறையில் " நெல்குத்தும் அரிசி ஆலையொன்றும் வைத்திருத்தல் " என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக " நெல் குத்தும் அரிசி ஆலை யொன்று வைத்திருத்தலும் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் நிறுவன மொன்று வைத்திருத்தலும் " என்னும் வார்த்தைகளை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

1–185—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

VC/N/9/1

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஓயபலாத்தைக் கோறளைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையாலாக்கப்பட்டு அப்பிரிவினால் அன்னா ருக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 21 ந் வெ.

### துணைவிதி

இக்கிராமச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தண்ணீர் சேவை சம் பந்தமான நியமத்துணைவிதிகள், இக்கிராமச் சபைக்கு அவை ஏற்புடைய அளவுக்கு 27 (2) ம் துணைவிதியை நேரடுத்துப் பின்வரும் புதிய துணை விதியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :

" 27 (3) சபையால் நிறுவப்பட்டுள்ள தண்ணீர்ச் சேவையிலிருந்து ஒரு பிரத்தியேகமான இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள எம்மனையகத் தினதும் சொந்தக்காரரோ, அல்லது குடியிருப்பாளரோ முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதும், சொல்லப்பட்ட தண்ணீர் சேவையிலிருந்து தண்ணீர் பெறும் ஒவ்வொரு மாதத்தின் பொட்டும், அம்மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள முதல் ½ அங்குல வடிகுழா ய்க்கு ஒரு ரூபா ஐம்பது சதமும், மேலதிகமாகப் பொருத்தப்படுள்ள ஒவ்வொரு வடிகுழாய்க்கும் ஐம்பது சதமும் கட்டணமாகச் செலுத்து தல் வேண்டும்.

இத்துணைவிதியில் :—

" சபை " என்பது நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஓயபலாத்தைக் கோறளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப்பொருள்படும்."

1–179—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறால் " கையொப்ப மிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. **சந்தா விபரம் 1.12.69 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | | | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | 2.1·70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 9.1·70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 16.1·70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3·30 |
| | 23.1·70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12·00 |
| | 29.1·70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12·00 |
| **பெப்புருவரி** | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| **மாச்சு** | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
**1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.**